முருகப்பெருமான் துணை

**மகான் திருநாளை போவார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.08.2022**, செவ்வாய்கிழமை

1. திருவருள் தந்திடும் அரங்கா
   தெய்வநெறி காட்டிடும் தேசிகா
   குருவருளாக மக்களை நோக்கி
   குவலயத்தில் அருள்புரியும் அரசா
2. அரசனே உன்பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
   வரமென மூவையீர் திகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 17 நாள், 02.08.2022 செவ்வாய்கிழமை)
   வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே திருநாளை போவார் யானும்
   தாமுரைப்பேன் உலகோர் நலம்பெற
   மண்ணுலகில் அரங்கன் காட்டுகின்ற
   மாதவ தர்மநெறி முறைகள்
4. முறையாக மக்களால் ஏற்கப்பட்டு
   முழுமைபட ஞானமாக பின்பற்றப்பட
   குறையிலா சத்திய வழிகள்தானும்
   குவலயம் எங்கும் நிறைந்து நிற்கும்
5. நிற்கவே அரங்கனை போற்றுகின்ற
   நாமஜெபங்கள் உலகமெங்கும் பரவ
   உற்றதொரு கலியுக மாற்றமாக
   உலகமெங்கிலும் குருவருள் துணைவரும்
6. வருகவே மனிதர்கள் சக்தி
   வல்லமைமிக்க ஞானசக்தியாக
   முருகப்பெருமான் வழிபாட்டை தரும்
   முழுமை கொண்ட சன்மார்க்க சக்தியாக
7. ஆகவே உலகமெங்கும் மாற்றம்
   அரங்கனால் இனிதே காணக்கூடும்
   வகைபட கலியுக மாற்றத்தை
   வரமாகத் தரவே ஞானிகள் படை
8. படைகள் எல்லாம் பிரணவக் குடிலை சூழ்ந்து
   பாதுகாப்பு தந்து உடனிருக்க
   தடையின்றி அரங்க மகான் தொடர்பு
   தரணியோர்க்கு இருந்தாலே போதுமப்பா
9. அப்பனே அகிலத்தில் யாவருக்கும்
   அழியாமை இலகுவாக கிட்ட நேரும்
   ஒப்புகொண்டு சரவண ஜோதி ஏற்றி
   ஒவ்வொரு நாளும் பூஜைகள் செய்துவந்தால்

10. வந்திட நல்வினை உலகில் பெருகி
வக்கிர கொடூர தீவினை அகலும்
சிந்தைபட தர்மத்தை செய்துகொண்டு
சித்திகள் அடைய வாய்ப்பு கிட்டும்

11. கிட்டவே அரங்கன் தர்மமே
குவலயத்தை மாற்றுவது உறுதியாகும்
தட்டாது ஓங்காரக் குடில் நோக்கி
தரணியோர் வரும் தொட்டு மாற்றம் சடுதி நிகழும்
அருளாசி முற்றும் முற்றே

—சுபம்—